1989 மே 5]

இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் திரு. மாரப்பன் போன்று மற்றும் பலரும் அடிக்கடி விண்ணப்பம் கொடுக்கிற காரணத்தால், அரசு அது குறித்து ஒரு முடிவு எடுத்தது. அதாவது வட்டமலைக்கரை ஓடையின் நடைமுறை விவரங்கள், நீர் வரத்து, உபரி நீர்ப்போக்கு, பயன்பெற்றுள்ள பாசனப் பரப்பு, பரம்பிக்குளம்—ஆளியாறு பகுதியிலிருந்து வருகிற கசிவு நீர் அளவு ஆகியவைகளையெல்லாம் ஐந்து ஆண்டுக் காலத்திற்குக் கணக்கெடுத்து, அதன் மூலமாக இன்னொரு நீர்த் தேக்கத் திட்டம் கட்டுவதற்கான சாத்தியக்கூறு உண்டா என்று ஆராயலாம் என்று அரசு முடிவெடுத்தது. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் திரு. மாரப்பன் அவர்களுடைய அவசரத்தை முன்னிட்டு, ஐந்து ஆண்டுக் காலக்கெடு என்பதற்குப் பதிலாக மூன்று ஆண்டுக்காலத்தின் கணக்கையெடுத்து, அதன் அடிப்படையில் ஒரு முடிவெடுக்கலாம் என்று அரசு இப்போது முன்வந்திருக்கிறது. அதன் அடிப்படையின் இந்த ஆண்டு—அதாவது 1989-ம் ஆண்டு இறுதியில்—அரசுக்கு மூன்று ஆண்டுக் காலத்தின் அடிப்படையின் ஆய்வு அறிக்கை கிடைக்கும். அதற்குப் பிறகு, அடுத்த நீர்த்தேக்கத்தைக் கட்டுவதா அல்லது வேண்டாமா என்பதை அரசு முடிவு செய்யும். அதுவரை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பொறுத்தருள்க.

காவ்வாய்கள் சீரமைத்தல்

221—(*வினா எண் 562)—திரு. கே. சுப்பிரமணியபிள்ளை : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குமரி மாவட்டத்தில் இருக்கும் தோவாளைச் சானல், புத்தனாறு கால்வாய்கள் சீரமைக்கப்படுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது சீரமைக்கப்படும் ?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) சீரமைக்கும் பணிகள் தலைமைப் பொறியாளர், தேசிய நீர் மேலாண்மை அவர்களின் திட்டப்படி எடுத்துக் கொள்ளப்படும்.

திரு. கே. சுப்பிரமணியபிள்ளை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதி மக்களின் நீண்ட நாளைய—முக்கிய கோரிக்கையான கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள முக்கியமாகப் பேச்சுப்பாறை—பெருஞ்சாணி அணையிலிருந்து புறப்பட்டு, நீளம் கூடிய தோவாளை—புத்தனாறு

சேனல்கள் நீண்டக் காலமாகத் தூர் எடுக்கப்படாமல் இருக்கின்றன. அதனால் கடை வரம்பு நிலங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. சேனல் கரைகளை ஆக்கிரமிப்பாளர்கள் ஆக்கிரமித்து உள்ளனர். எனவே அதை அகற்றி, தூர் எடுத்து, உடைப்புகள் ஏற்பட்டுள்ள இடத்தை அடைத்து, கரைகள் பாதுகாக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, அதைத்தான் தெரிவித்தேன். தோவாளை மற்றும் புத்தனாறு கால்வாய்கள் கோதையாற்றுப் பாசனத்தின் கீழ் வருபவைகளாகும். எனவே தேசிய நீர் மேலாண்மைத் திட்டத்தின் கீழ் கோதையாறு பாசன முறையை மேம்பாடு செய்யும் பணிகள் விரைவில் மேற்கொள்ளப்பட இருக்கின்றன. எனவே தோவாளை மற்றும் புத்தனாறு கால்வாய்களின் புனரமைப்பு வேலைகளுக்கு என ரூ. 235.48 லட்சமும், மற்றும் ரூ. 14.5 லட்சமும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

திரு. கே. சுப்பிரமணியபிள்ளை: தலைவர் அவர்களே, தோவாளை—புத்தனாறு சேனல் பாசன சிறிய குளங்கள் ஆழப்படுத்தப்படுமா ?

மாண்புமிகு திரு. துரைமுருகன்: தலைவர் அவர்களே, இந்த வேலைகள் நடக்கிறபோது அவைகளும் பரிசீலிக்கப்படும்.

திரு. செ. நூர்முகமது: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் தோவாளை சேனல், புத்தனாறு சேனல் போன்று பி. பி. சேனல் மற்றும் திருவிதாங்கோடு சேனல் போன்றவைகள் கூட மிகவும் பழுதடைந்திருக்கிற காரணத்தால் அதில் ஓடுகிற தண்ணீர் விரையமாகச் சென்று, ஏற்கெனவே தண்ணீர்த் தட்டுப்பாடுள்ள நிலையில் விவசாயத்திற்குத் தேவையான தண்ணீர் கிடைக்காத ஒரு சூழ்நிலை இருக்கிறது. இவைகளைச் சீரமைத்து, வீணாகிற தண்ணீரைப் பயன்படுத்தினால் ஏராளமான விளைச்சலுக்கு வழிவகை செய்ய முடியும். ஆகவே பி. பி. சேனல் மற்றும் திருவிதாங்கோடு சேனல் போன்று கன்னியாகுமரி மாவட்டத்தில் இருக்கிற பல்வேறு சேனல்களும் பழுதுபட்டிருக்கிற நிலையில் அவைகளைப் பழுதுபார்க்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய நீர் மேலாண்மைத் திட்டத்தினுடைய முக்கிய நோக்கம், இப்படி பழுதுபட்டுள்ள பழைய கால்வாய்களைப் புதுப்பிப்பது, நீரைச் சிக்கனப்படுத்துவது, பாசனப் பகுதிகளை அதிகப்படுத்துவது ஆகியவைதான். அந்த வகையில் தேசிய நீர் மேலாண்மைத் திட்டத்தின் கீழ் சாத்தனூர், கோதையாறு, தாமிரபரணி, கம்பம் பள்ளத்தாக்கு, அமராவதி,

1989 மே 5]

சேத்தியாத்தோப்பு, மருதாநதி ஆகிய பகுதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. முதற்கட்டமாக இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட தோவாளை—புத்தனாறு கால்வாய்கள் எடுத்துக் கொள்ளப்பட இருக்கின்றன—காரணம் அவை கோதையாறு பாசனத்தின் கீழ் வருவதால். அதற்குப் பிறகு மாண்புமிகு உறுப்பினர் சொன்ன அந்தத் திட்டங்களும் மேற்கொள்ளப்படும்.

(முற்பகல் 9–50)

உணவு உறைவிடப் பள்ளிகளில் தங்கிப் பயிலும் மாணவர்கள்.

222—(*வினா எண். 925) திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அனைத்து உணவு உறைவிடப் பள்ளிகளில் தங்கிப் பயிலும் மாணவர்களுக்கு உணவுக்கு ரூபாய் 150-ம், இதரச் செலவுக்கு ரூபாய் 10-ம் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : தலைவர் அவர்களே, அனைத்து உணவு உறைவிடப் பள்ளிகளில் தங்கிப் பயிலும் மாணவர்களுக்கு உணவுக்கு ரூபாய் 150-ம் இதரச் செலவுக்கு ரூ. 5-ம் வழங்குவது குறித்து அரசு பரிசீலித்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட நலத்துறை மூலமாகவும், மலைவாழ் மக்கள் நலத் துறை மூலமாகவும் உண்டு உறைவிடப் பள்ளிகளும், அரசினர் மாணவ மாணவியர் விடுதிகளும் நடத்தப்பட்டு வருவது தங்களுக்குத் தெரியும். இந்த விடுதிகளில் படிக்கின்ற மாணவர்களுக்கு உணவிற்காக மாதம் ஒன்றுக்கு தற்போது ரூ. 85 கொடுத்துக்கொண்டு வருகிறார்கள். இது சற்றுக் குறைவாக இருக்கின்ற காரணத்தால் இன்றைக்கு, உள்ள விலைவாசிக்கு ஒப்ப ரூ. 150 உணவுச் செலவுக்காகவும் இதரச் செலவுக்காக சோப்பு, சீப்பு, எண்ணெய் போன்றவைகளுக்கு ரூ. 2 கொடுத்துக் கொண்டு வருவது மிகவும் குறைவாக இருக்கின்ற காரணத்தால் குறைந்தபட்சம் 10 ரூபாயாக அதை உயர்த்தி இந்த மாணவர்களின் நலன் மேம்பாடு அடைய இந்த அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.